1981 ஏப்ரல் 20]

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மதுரை மாவட்டத்தில் சிறிய சர்க்கரை ஆலை அமைக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அது எங்கே ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டியது அல்ல.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் துவங்கப்படவிருக்கிற சிறிய சர்க்கரை ஆலையை 500 டன் பிழிதிறன் கொண்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செய்வதுதான் செய்கிறோம், பெரிய சர்க்கரை ஆலையாக 1,200 டன் பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலையாக அமைப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, ஏற்கெனவே தஞ்சை மாவட்டத்தில் தனியார் துறையில் ஒன்றும், அரசுத் துறையில் ஒன்றுமாக இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. மேலும் 1,200 டன் பிழிதிறன் கொண்ட ஒரு சர்க்கரை ஆலையை நிறுவினால் ஏற்கெனவே இருக்கிற ஆலைகளுக்குக் கரும்பு கிடைக்காமல் அவைகளின் வேலைகள் பாதிக்கும் என்று அவர்களுடைய சங்கத்தின் மூலமாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் பாதிப்பு இல்லாமல், அரசின் எண்ணமும் நிறைவேறுகின்ற வகையில் சிறிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்கும் நோக்கத்துடன் அங்கே 500 டன் பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலையைத் தொடங்க இருக்கிறோம்.

செங்கற்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை இடம் மாற்றுதல்.

*வினா எண். 811—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்—மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு நிலையத்தை காஞ்சீபுரத்திற்கு மாற்ற வேண்டும் என கோரிக்கை உள்ளதா ?

(ஆ) இது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, காஞ்சீபுரம் துணை வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வேலைக்கு ஆட்களை 'கால் பார்' செய்யும்போதெல்லாம் சென்னையிலிருக்கின்ற வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து தான் ஆட்களை வரவழைக்கிறார்கள். அதனால் காஞ்சீபுரத்தில் பதிவு செய்யக் கூடியவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, தற்போது அதுபற்றிய விவரங்கள் இல்லை. ஆனால் அது, குறித்து அரசு பரிசிலித்து ஆவன செய்யும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதைப் போன்ற வேலை வாய்ப்பு அலுவலகங்களைப் புதிதாக திறக்க அரசுக்கு உத்தேசம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பிரிவுத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம் மேட்டூரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகமும், இராமநாதபுரம் மாவட்டத்தில் விருதுநகரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகமும் திறக்கப்படுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

பவானி எஸ். எஸ். எம். நூற்பாலையில் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என்.வி.என். சோமு, அ. ரகுமான்கான் ஆகியோர் ''சேலம் மாவட்டம் பவானி எஸ். எஸ். எம். நூற்பாலையில் நடைபெறும் வேலை நிறுத்தத்தினால் 15-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கைது